தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

<u>வழக்கு எண்.25254/விசாரணை/09</u>

**<u>விசாரணை நாள் 29.01..2010 – இராமநாதபுரம்</u>**

| | |
|---|---|
| முன்னிலை | முனைவர் (திரு) ஆர். பெருமாள்சாமி, எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி., மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் | திரு. சோ. சிவராஜ்<br>த/பெ. சோலைமலை<br>நெ.1, வடக்கூரணித் தெரு<br>கழனிவாசல், காரைக்குடி<br>சிவகங்கை மாவட்டம். |
| பொது அதிகார அமைப்பு | பொதுத் தகவல் அலுவலர்<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>சிவகங்கை மாவட்டம்.<br><br>பொதுத் தகவல் அலுவலர்<br>வட்டாட்சியர் அலுவலகம்<br>காரைக்குடி<br>சிவகங்கை மாவட்டம். |

----------

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இவ்வாணையத்தால் இன்று (29.01.2010) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு. சோ. சிவராஜ், பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர்கள் திரு. மாரியப்பன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரின் (பொது) சார்பாக திரு. கே. பிரேம்குமார், தனித் துணை வட்டாட்சியர் (வரவேற்பு), ஆட்சியர் அலுவலகம், சிவகங்கை மற்றும் திரு. ஏ. சாந்தாராம், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், காரைக்குடி ஆகியோர் வந்திருந்தனர்.

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் மனுதாரர் 12.09.09 அன்று பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில் (1) மதுரை பதிவுத் துறை துணைத் தலைவர்

அலுவலகக் கடிதத்தின்படி வட்டக்குழுவின் பரிந்துரை தங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டதா, (2) அவை சரியான பரிந்துரை எனில் மையக் குழுவின் தலைவராகவுள்ள சென்னை பதிவுத் துறைத் தலைவருக்கு தங்களின் பரிந்துரை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதா என்ற இரண்டு தகவல்களை வழங்குமாறு கோரியிருந்தார். பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு 10.8.09 அன்று கடிதம் அனுப்பியுள்ளார். சட்டப்பிரிவு 7(1)ன் கீழ் 30 நாட்களுக்குள் தகவல் பெறாததால், மனுதாரர் சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீடு செய்யாமல், சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் 09.10.09 அன்று இவ்வாணையத்திற்கு இரண்டாவது மேல்முறையீடு செய்ததன் அடிப்படையில் இவ்வழக்கு சட்டப்பிரிவு 18(3)ன் கீழ் இன்றைய விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இன்றைய விசாரணையின் போது மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவல்கள் சரியில்லையென்று இவ்வாணையத்தின் முன் தெரிவித்தார். எனவே, பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய இரண்டு இனங்களுக்கும் அரசு ஆவணங்களில் உள்ளபடி முழுமையான, சரியான தகவல்களை இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரண்டு வாரங்களுக்குள் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரரின் கையொப்பம் பெற்ற நகலையும், தகவல் வழங்கிய விபரத்தையும் இவ்வாணையத்திற்கு மூன்று வாரங்களுக்குள் அனுப்பி வைக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

தமிழ்நாடு தகவல் ஆணையம்.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 09.2.2010
ஆணையத்தின் ஆணைப்படி.

உதவிப் பதிவாளர்.

<u>வழக்கு எண்.25254/09</u>
பொதுத் தகவல் அலுவலர்
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
சிவகங்கை மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்
வட்டாட்சியர் அலுவலகம்
காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்.

திரு. சோ. சிவராஜ்
த/பெ. சோலைமலை
நெ.1, வடக்கூரணித் தெரு
கழனிவாசல், காரைக்குடி
சிவகங்கை மாவட்டம்.